புலவர் கா. கோவிந்தன் : ஆசிரியர்களுக்கு ரூபாய் 20-க்குக் குறைந்த அளவில் பென்ஷன் இருக்கக்கூடாது, குறைந்தது ரூபாய் 20 அளவுக்கு பென்ஷன் கொடுக்கவேண்டும் என்பதை அரசாங்கம் கொள்கையாக ஏற்றுக்கொண்டிருக்கிறது. அவர்கள் இப்பொழுதே பென்ஷன் வாங்கிக்கொண்டிருக்கிறார்கள். இப்பொழுது ரூபாய் 20-க்கும் குறைந்த பென்ஷன் வாங்குகிறவர்களுக்கு ரூபாய் 20 பென்ஷன் கொடுக்கப்படும் என்று அகௌண்டெண்டு-ஜெனரல் சர்டிபிகேட் கொடுத்துவிட்டால், அவர்கள் அந்தமாதிரி பென்ஷன் வாங்க முடியும். இப்படிச் செய்தால் இது எளிதிலே முடிந்து விடும். இதற்கு அரசாங்கம் வழிவகை செய்வார்களா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : கனம் அங்கத்தினர் கூறுவது எனக்கு சரியாகப் புரியவில்லை. அவர்களுக்கு குறைந்தபட்சமாக பென்ஷன் ரூபாய் 20 இருக்கவேண்டும், முதியோர்களுக்கு உதவி ரூபாய் 20 கொடுக்கிறோம், அந்த அடிப்படையில் ரூபாய் 5, 6, 10 பென்ஷன் வாங்கிக்கொண்டிருப்பவர்களுக்கும் ரூபாய் 20-க்கு பென்ஷன் உயர்த்திக் கொடுக்கப்பட்டிருக்கிறது. அது ஏப்ரல் மாதத்திலிருந்து கொடுக்கப்பட்டு வரும்.

கல்வித்துறை அதிகாரிகளின் சம்பளம்

* 182 கேள்வி.—திரு. எம். எஸ். செல்வராஜன் : கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப் பாரா—

ஜில்லா கல்வி அதிகாரிகள், ஸ்பெஷல் கல்வி அதிகாரிகள் டிவிஷனல் இன்ஸ்பெக்டர்கள், பெண்கள் பள்ளிகளின் இன்ஸ்பெக்ட்ரஸ்கள், சீனியர், ஜூனியர் இன்ஸ்பெக்டர்கள் இவர்களுக்குக் கூடுதல் சம்பளமும், பிரயாணப் படியும் கொடுப்பதற்குத் திட்டமிருக்கிறதா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இல்லை.

திரு. எம். எஸ். செல்வராஜன் : பாடசாலைகளிலே பரீட்சாதிகாரிகளாக இருக்கக்கூடியவர்கள் பெறுகிற சம்பளம் அங்கே பணி செய்கிற தலைமை ஆசிரியர்கள், நீண்ட காலமாக பணிபுரிந்து வருகிறவர்களுடைய சம்பளத்தைவிட குறைந்த அளவுக்கு இருக்கின்ற நிலைமை இருக்கிறதா ? அத்தகைய பரீட்சாதிகாரிகளுடைய விசேஷ நிலைமையைக் கருதி, அவர்களுடைய அடிப்படைச் சம்பளத்தை மாற்றி அமைக்கவோ அல்லது விசேஷ மான்யம் வழங்குவதற்கோ அரசாங்கத்திற்கு உத்தேசம் உண்டா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அம்மாதிரி உத்தேசம் இப்பொழுது இல்லை என்றுதான் சொன்னேன்.

Grant to Municipal High Schools

* 183 *Q.*—Sri V. SANKARAN : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether there is any proposal before the Government to increase its annual grant to Municipal High Schools in the State; and